FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8301638

1. District : Madurai PS: VdAe Year: 2026 FIR No.: 16/2026 Date: 24.10.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: pc Act 1988 as amended by Sections பிரிவுகள்: 7, 7A of Pc Act 1988 as
(ii) Act சட்டம்: Prevention of corruption (Amendment) Act. 2018. Sections பிரிவுகள்: amended by Pc (Amendment
(iii) Act சட்டம்: and BNSS Act. Sections பிரிவுகள்: Act 2018 and 106 BNSS Act.
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 23.10.2026 Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை

Time Period : Time from : 15.40 hrs. Time to : 22.30 hrs.
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 24.10.2026 Time : 1400 hrs.
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) 24.10.2026 Time : 1500 hrs.
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Typed complaint.
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: North-East, 30 km
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address : o/o Commissioner, Melur municipality
முறைக் காவல் எண் முகவரி Melur, Madurai District.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : M. C. Sundara murugan (b) Father's/ Husband's Name : Chelliah
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : Deputy Inspector (g) Address : o/o District Inspection cell office
தொழில் Cell officer/Thasildar. முகவரி Madurai.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1) Tr. V. Muthukumar, Age 48/2026, s/o Vellaikamma, municipal Engineer, Melur municipality, Melur, Madurai District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— Nil —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Attached separate sheet Pages 3 to 14

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

24.10.2026

24/10/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 24.10.2026 16.50hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் K. Kumaraguru,
Rank: நிலை Inspector of Police, எண் No.
VMAC, Madurai.

குற்றவாளிகள் பெயர் விபரம் தொடர்ச்சி :

A-2 திரு.உலகநாதன், வயது 52/2026,
த/பெ.சுந்தரராஜன்,
பொதுபணி மேற்பார்வையாளர்,
மேலூர் நகராட்சி அலுவலகம்,
மதுரை மாவட்டம்.

A-3 திரு.G.நெல்லைராஜன், வயது 57/2026,
த/பெ.கோவிந்தன்,
பிட்டர்,
மேலூர் நகராட்சி அலுவலகம்,
மதுரை மாவட்டம்.

A-4 திருமதி.M.முத்துலெட்சுமி, வயது 55/2026,
க/பெ.முத்துராம்,
இளநிலை உதவியாளர், (காசாளர்)
மேலூர் நகராட்சி அலுவலகம்,
மதுரை மாவட்டம்.

A-5 திரு.A.வீரமணி, வயது 54/2026,
த/பெ.அழகாத்திரி,
வருவாய் உதவியாளர்,
மேலூர் நகராட்சி அலுவலகம்,
மதுரை மாவட்டம்.

A-6 திரு.D.செல்லப்பாண்டி, வயது 58/2026,
த/பெ.துரைப்பாண்டி,
வருவாய் உதவியாளர்,
மேலூர் நகராட்சி அலுவலகம்,
மதுரை மாவட்டம்.

A-7 திரு.S.சசிகுமார், வயது 48/2026 (தனி நபர்),
த/பெ.சீனிவாசன்,
உரிமம் பெற்ற கட்டிட சர்வேயர்,
மேலூர்.

A-8 திரு.L.சரவணகுமார், வயது 37/2026 (தனி நபர்),
த/பெ.லெட்சுமணபெருமாள்,
பிளானிங் என்ஜினியர்,
True wave associates company, மதுரை.

A-9 திரு.G.மணிகண்டன், வயது 36/2026,
த/பெ.கணேசன்,
துப்புரவு பணியாளர் (ஒப்பந்த ஊழியர்),
Jai Seeradi Sai manpower Agency, மேலூர்,மதுரை.

24/10/2026.

INSPECTOR OF POLICE
Vigilance Anti Corruption
MADURAI

Honoured Sir,

Submitted,

இன்று 24.10.2026-ம் தேதி மதியம் 14:00 மணிக்கு, காவல் ஆய்வாளர் K.குமரகுரு ஆகிய நான், மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலவலகத்தில் அலுவலில் இருந்த போது, மதுரை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலக, துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.C.சுந்தரமுருகன், அவர்கள் மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி என்னிடம் தனி அறிக்கை அளித்தார். மதுரை ஊ.த.க. பிரிவு, கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின் பேரில், மேற்படி தனி அறிக்கை மற்றும் அத்துடன் ஒப்படைத்த மதுரை மாவட்டம், மேலூர் நகராட்சி அலுவலகத்தில் நடத்தப்பட்ட திடீர் இணை ஆய்வு குறிப்புரை நாள் : 23.10.2026, திடீர் இணை ஆய்வின் போது மேற்படி அலுவலகத்தில் கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் ரூ.23,410/-, கைப்பற்றப்பட்ட 8 ஆவணங்கள், சோதனையின் போது பெறப்பட்ட 9 வாக்குமூலங்கள் ஆகியவற்றை பார்வையிட்டேன். தனி அறிக்கையில் உள்ள விபரம் பின்வருமாறு. அனுப்புநர் திரு.C.சுந்தரமுருகன், துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், பழைய இராமநாதபுரம் ஆட்சியர் அலுவலகம், மதுரை. ந.க.எண்.54/2026/I, நாள் : 24.10.2026, அய்யா, பொருள் : மதுரை மாவட்டம் - திடீர் இணை ஆய்வு - நகராட்சி நிர்வாகம் - குற்ற அலுவலர்கள் மேலூர் நகராட்சி அலுவலகத்திற்கு வரும் ஒப்பந்ததாரர்களிடம் லஞ்சமாகப் பணம் வாங்குவதாகவும், லஞ்சப்பணத்தை மேற்படி அலுவலகத்தின் அலுவலர்கள் GPay மூலமாக பெறுவதாகவும் கிடைத்த இரகசிய தகவலின் பேரில் திடீர் இணை ஆய்வு மேற்கொண்டது - ரூ.23,410/- பணம் கைப்பற்றப்பட்டது - மேல் நடவடிக்கை வேண்டி புகார் அளிப்பது - தொடர்பாக. மதுரை மாவட்டம், மேலூர்-திருவாதவூர் ரோட்டில் இயங்கிவரும் மேலூர் நகராட்சி அலுவலகத்தில் நகராட்சி அலுவலகத்திற்கு வரும் ஒப்பந்ததாரர்களிடம் லஞ்சமாகப் பணம் வாங்குவதாகவும், லஞ்சப்பணத்தை மேற்படி அலுவலகத்தின் அலுவலர்கள் GPay மூலமாக பெறுவதாகவும் கிடைத்த இரகசிய தகவலின் பேரில் 23.10.2026-ம் தேதி மதியம் 13.00 மணிக்கு காவல் ஆய்வாளர் திரு.குமரகுரு அவர்கள் எனக்கு தகவல் தெரிவித்தார். பின்னர் அந்தத் தகவலை நானும் விசாரித்து உறுதி செய்தபின்னர் மேற்படி அலுவலகத்தில் திடீர் சோதனை செய்யலாம் எனக் கூறியதன்

பேரில், நான், மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர்கள் திரு.K.குமரகுரு, திருமதி.இளம்தென்றல் மற்றும் போலீஸ் பார்ட்டியினரும் இணைந்து 23.10.2026-ம் தேதி மேலூர் நகராட்சி அலுவலகத்திற்கு அருகில் சுமார் 15.20 மணிக்கு சென்று, கண்காணித்தபோது, ஒப்பந்ததாரர்கள் மேற்படி அலுவலகத்திற்கு வந்து சென்றபடி இருந்தார்கள். பின்னர் மேற்படி தகவலை உறுதி செய்து கொண்டு மதியம் சுமார் 15:35 மணியளவில் திடீர் இணை ஆய்வு மேற்கொள்ள மேற்படி மதுரை மாவட்டம், மேலூர் நகராட்சி அலுவலகத்தின் உள்ளே சென்ற போது, நகராட்சி பொறியாளர் அலுவலக அறைக்கு சென்று விசாரித்து தெரிந்துகொண்ட நகராட்சி பொறியாளர் திரு.முத்துக்குமார் அவர்களிடம் என்னையும், மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர்கள் திரு.குமரகுரு மற்றும் திருமதி.இளம்தென்றல் மற்றும் காவல் குழுவினரை அவரிடம் அறிமுகப்படுத்திய பின்னர், மேற்படி மேலூர் நகராட்சி அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு மேற்கொள்ளவது குறித்து தகவல் தெரிவித்தேன். மேலும், திரு.முத்துக்குமார் அவர்களைப் பற்றி விசாரித்த போது, அவர் அவரது பெயர் K.முத்துக்குமார் என்றும், அவர் நகராட்சிப் பொறியாளராக மேற்படி அலுவலகத்தில் கடந்த 02.10.2024-ம் தேதி முதல் பணிபுரிந்து வருவதாகவும், மேற்படி அலுவலகத்தில், நகராட்சி ஆணையாளராக திரு.முத்துசெல்வம் என்பவர் பொறுப்பு ஆணையாளராக உள்ளார் என்றும், அவர் மானாமதுரை நகராட்சி ஆணையாளராக உள்ளதாகவும், மேற்படி அலுவலகத்தில் நகராட்சி பொறியாளராக அவரும் பொதுப்பணி மேற்பார்வையாளராக திரு.உலகநாதன், பிட்டராக திரு.G.நெல்லைராஜன், வருவாய் உதவியாளராக D.செல்லப்பாண்டி, வருவாய் உதவியாளராக சு.வீரமணி, இளநிலை உதவியாளர் திருமதி.முத்துலெட்சுமி உட்பட மொத்தம் 21 அரசு அலுவலர்களும் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். பின்னர், அவரது சம்மதத்தின் பேரில், மேற்படி அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு ஆரம்பிக்கப்பட்டது. மேற்படி அலுவலகத்தின் பொது பிரிவில் திரு.நாகசங்கர், தேர்ச்சி திறனற்ற பணியாளர் என்பவர் வைத்திருந்த ரூ.450/- எடுத்து காண்பித்து அதனை அவரது போக்குவரத்து செலவிற்கு வைத்திருப்பதாகத் தெரிவித்தார். மேலும் காவல் ஆய்வாளர் திருமதி.இளம்தென்றல் அவர்கள் உதவியுடன் திருமதி.ஜோதி, இளநிலை உதவியாளர் என்பவரை விசாரித்தபோது திருமதி.ஜோதி அவர்கள் வைத்திருந்த ரூ.70/- யை எடுத்து காண்பித்து அதனை அவரது போக்குவரத்து செலவிற்கு

வைத்திருப்பதாகத் தெரிவித்தார். பிறகு திருமதி.பாண்டிஜெயம் தற்காலிகத் தட்டச்சர் என்பவரை விசாரித்தபோது, திருமதி.பாண்டிஜெயம் அவர்கள் வைத்திருந்த ரூ.2,500/- எடுத்து காண்பித்து அதனை அவரது அப்பாவின் வங்கி கடன் செலுத்த வைத்திருப்பதாகத் தெரிவித்து, மேலும் அப்பணம் பற்றிய விபரத்தை மேற்படி அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் தனி நபர் கையிருப்பு பதிவேட்டில் பதிந்துள்ளதாகத் தெரிவித்தார். மேலும் அலுவலக உதவியாளர் திருமதி.சுகந்தி என்பவரை விசாரித்தபோது அவர் வைத்திருந்திருந்த ரூ.50/-யை எடுத்து காண்பித்து அதனை அவரது செலவிற்கு வைத்திருப்பதாகத் தெரிவித்தார். மேற்படி அறையிலிருந்த திருமதி.இசக்கியம்மாள், உதவியாளர் என்பவரை விசாரித்தபோது அவர் வைத்திருந்திருந்த ரூ.170/-யை எடுத்து காண்பித்து அதனை அவரது போக்குவரத்து மற்றும் டீ செலவிற்கு வைத்திருப்பதாகத் தெரிவித்தார். மேற்படி நான்கு அலுவலர்கள் வைத்திருந்த பணத்திற்கு சரியான முகாந்திரம் கூறியதால், அவர்களிடமிருந்து பணம் எதுவும் கைப்பற்றவில்லை. மேலும் காவல் ஆய்வாளர் திருமதி.இளம்தென்றல் அவர்கள் உதவியுடன் மேற்படி அலுவலத்தில் பொறியாளர் அறையில் உள்ள வரவேற்பு அறையில் பணியில் இருந்த திருமதி.சௌந்தர்யா, பணி ஆய்வர் அவர்களை விசாரித்தபோது அவர் ரூ.150/- எடுத்து காண்பித்து அதனை அவரது டீ செலவிற்கு வைத்திருப்பதாகத் தெரிவித்தார். மேலும் திருமதி.முத்துசாரதா கணினி ஆப்பரேட்டர் மற்றும் எழுத்தர் அவர்களை விசாரித்தபோது அவர் ரூ.250/-யை எடுத்து காண்பித்து அதனை அவரது போக்குவரத்து செலவிற்கு வைத்திருப்பதாகத் தெரிவித்தார். மேற்படி அறையின் வடக்கு பக்கம் கண்ணாடி மற்றும் பிளைவுட்டால் ஆன தடுப்பிற்கு பின்பு அமைந்திருந்த நகராட்சி பொறியாளர் அறையில் இருந்த மேற்படி நகராட்சி பொறியாளர் திரு.முத்துகுமார் அவர்களிடம் விசாரித்தபோது அவர் அவரது சட்டைப்பையில் வைத்திருந்த பணம் ரூ.100/-யை எடுத்து காண்பித்து அதனை அவரது சொந்த செலவிற்கு வைத்திருப்பதாகத் தெரிவித்தார். மேற்படி 3 அலுவலர்கள் அவர்கள் வைத்திருந்த பணத்திற்கு சரியான முகாந்திரம் கூறியதால், அவர்களிடமிருந்து பணம் எதுவும் கைப்பற்றவில்லை. மேலும் காவல் ஆய்வாளர் திருமதி.இளம்தென்றல் அவர்கள் உதவியுடன் மேற்படி அலுவலத்தில் வருவாய்ப் பிரிவு அறையில் பணியில் இருந்த திருமதி.R.B.சரண்யா, வருவாய் ஆய்வாளர் அவர்களை விசாரித்தபோது அவர் ரூ.30/-யை எடுத்து காண்பித்து அதனை அவரது போக்குவரத்து செலவிற்கு

வைத்திருப்பதாகத் தெரிவித்தார். மேலும் திருமதி.லூர்ட்டஸ் அன்னமேரி, சமுதாய அமைப்பாளர் அவர்களை விசாரித்தபோது அவர் ரூ.770/- எடுத்து காண்பித்து அதனை அவரது போக்குவரத்து செலவு மற்றும் சொந்த செலவிற்கு வைத்திருப்பதாகத் தெரிவித்தார். பின்னர் திரு.ஜெயபாலன், வருவாய் உதவியாளர் அவர்களை விசாரித்தபோது ரூ.170/-யை எடுத்து காண்பித்து அதனை அவரது இருசக்கர வாகனத்திற்கு எரிபொருள் நிரப்ப வைத்திருப்பதாகத் தெரிவித்தார். மேற்கூறிய 3 அலுவலர்கள் வைத்திருந்த பணத்திற்கு சரியான முகாந்திரம் கூறியதால், அவர்களிடமிருந்து பணம் எதுவும் கைப்பற்றவில்லை. மேற்படி அலுவலகத்தில் பணியில் இருந்த திரு.செல்லப்பாண்டி, வருவாய் உதவியாளர் அவர்களை விசாரித்தபோது அவர் ரூ.1,000/- (100 X 3), (50 X 6), (20 X 15), (10 X 10) கொண்டு வந்ததாகக் கூறி அதனை எடுத்து ஆஜர் செய்து அப்பணம் போக்குவரத்து செலவு, சாப்பாடு மற்றும் மருந்து வாங்க வைத்திருப்பதாகவும் ஆனால் அந்தப் பணம் பற்றிய விபரத்தை அலுவலக தனிநபர் பணம் கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்யவில்லை என்று தெரிவித்தார். அவர் கூறிய விளக்கம் சந்தேகப்படும்படி இருந்ததால் ரூ.1,000/-யைத்தை கைப்பற்றினேன். மேலும் வீரமணி, வருவாய் உதவியாளர் அவர்களை விசாரித்தபோது அவர் ரூ.1,110/- (200 X 5), (50 X 2), (10 X 1) கொண்டு வந்ததாகக் கூறி அதனை எடுத்து ஆஜர் செய்து அப்பணம் பேரனுக்கு மருந்து வாங்க வைத்திருப்பதாகவும் ஆனால் பணத்தைப் பற்றிய விபரத்தை அலுவலக தனிநபர் பணம் கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்யவில்லை என்று தெரிவித்தார். அவர் கூறிய விளக்கம் சந்தேகப்படும்படி இருந்ததால் அந்த பணம் ரூ.1,110/-யை த்தை கைப்பற்றினேன். மேற்படி அறையின் காசாளர் இருக்கையில் அமர்ந்து பணி செய்துகொண்டிருந்த திருமதி.முத்துலெட்சுமி, இளநிலை உதவியாளர் அவர்களை விசாரித்த போது, அவர்களின் பணி கணினியில் வீட்டு வரி, தண்ணீர் வரி, தொழில்வரி, பிறப்பு இறப்பு ரசீதுகள் போட்டு சம்மந்தப்பட்டவர்களிடம் அரசு செலுத்தவேண்டிய தொகையை அவர்களிமிருந்து பெற்று அவற்றை மேலூரில் உள்ள IOB வங்கியில் செலான் மூலம் கட்டுவது என்றும், 23.10.2026 ஆம் தேதி வரை ரூ.1,54,099/- வசூலானதாகவும், அவற்றை மேற்படி வங்கியில் கட்டுவதற்காக உள்ளதாகத் தெரிவித்து அப்பணத்தையும், அதற்கான விபரத்தையும் காண்பித்து அதனை மாலை 04.00 மணிக்குள் கட்ட வேண்டும் எனத் தெரிவித்தார். அதன் காரணமாக அவர்

அப்பணத்துடன் மேற்படி வங்கிக்கு அனுப்பிவைக்கப்பட்டார். பிறகு சிறிது நேரம் கழித்து மேற்படி அலுவலகத்திற்கு பணம் செலுத்திய ரசீதுடன் திரும்பி வந்தார். அந்த சமயத்தில் அவரிடம் உள்ள பணம் விபரமாக விசாரித்த போது அவர் காசாளர் பெட்டியில் இருந்த ரூ.4,340/- மற்றும் அவரது கைப்பையில் இருந்த ரூ.1,000/- கொண்டு வந்ததாக கூறி அதனை எடுத்து ஆஜர் செய்தார். மேலும் அவர் மணிமாலா என்ற பெண்ணிடமிருந்து வசூல் செய்யப்பட்ட தொகை ரூ.6,272/- என்றும், அத்தொகையில் வங்கியில் செலுத்துவதற்கு ரூ.1,932/- தேவைப்பட்டதால் மேற்படி ரூ.6,272/- லிருந்து எடுத்து சென்றதாகவும் மீதி ரூ.4,340/- காசாளர் பெட்டியில் இருந்ததாகத் தெரிவித்தார். மேலும் அவரது கைப்பையில் வைத்திருந்த பணம் ரூ.1,000/- மருந்து வாங்க வைத்திருப்பதாகவும் ஆனால் பணத்தை பற்றிய விபரத்தை அலுவலக தனிநபர் பணம் கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்யவில்லை என்றும் தெரிவித்தார். அவர் கூறிய விளக்கம் சந்தேகப்படும்படி இருந்ததால் என்னால் முத்துலெட்சுமி அவர்களிடம் ரூ.4,340/- மற்றும் ரூ.1,000/- என மொத்தம் ரூ.5,340/- கைப்பற்றினேன். மேலும் 1) மேலூர் நகராட்சி BRV abstract input parameter: from date:22/OCT/2026; to date: 22/OCT/2026 மற்றும் 2) 23.10.2026 ஆம் தேதி மேலூர் நகராட்சி ஆணையர் பெயரில் ரூ.6,630/-, ரூ.67,808/-, ரூ.3,600/-, ரூ.20,869/-, ரூ.38,610/- மற்றும் ரூ.16,582/- என்ற தொகைகளுக்கு Indian Overseas வங்கியில் செலுத்தியதற்கான செலான் நகல் ஆகியவற்றை திருமதி.முத்துலெட்சுமி அவர்கள் விசாரணைக்காக ஆஜர் செய்ததையும் கைப்பற்றினேன். மேற்படி அலுவலத்தில் சுகாதாரப் பிரிவு அறையில் பணியில் இருந்த சு.தினேஷ்குமார், சுகாதார ஆய்வாளர் அவர்களை விசாரித்தபோது அவர் ரூ.50/-யை எடுத்து காண்பித்து அதனை அவரது செலவிற்கு வைத்திருப்பதாகத் தெரிவித்தார். மேலும் திரு.தெய்வம் களப்பணி உதவியாளர் அவர்களை விசாரித்தபோது அவர் வைத்திருந்த ரூ.100/-யை எடுத்து காண்பித்து அதனை அவரது செலவிற்கு வைத்திருப்பதாகத் தெரிவித்தார். மேலும் காவல் ஆய்வாளர் திருமதி.இளம்தென்றல் அவர்கள் உதவியுடன் திருமதி.ரெஜினா இளநிலை உதவியாளர் அவர்களை விசாரித்தபோது அவர் வைத்திருந்த ரூ.30/-யை எடுத்து காண்பித்து அதனை அவரது செலவிற்கு வைத்திருப்பதாகத் தெரிவித்தார். மேலும் ஓட்டுநர் திரு.விஜயராஜன் அவர்களை விசாரித்தபோது அவர் வைத்திருந்த ரூ.50/-யை எடுத்து காண்பித்து அதனை அவரது செலவிற்கு வைத்திருப்பதாகத்

தெரிவித்தார். பின்னர் திரு.நளமகராஜன் அவர்களை விசாரித்தபோது அவர் வைத்திருந்த ரூ.130/-யை எடுத்து காண்பித்து அதனை அவரது செலவிற்கு வைத்திருப்பதாகத் தெரிவித்தார். மேற்படி 5 அலுவலர்கள் வைத்திருந்த பணத்திற்கு சரியான முகாந்திரம் கூறியதால், அவர்களிடமிருந்து பணம் எதுவும் கைப்பற்றப்படவில்லை. மேலும் மேற்படி அறையிலிருந்த சசிகுமாரை விசாரித்தபோது, தனக்கு வழங்கப்பட்ட உரிமம் கடந்த மார்ச் 2026 ஆம் ஆண்டு முடிவுற்றதாகவும், அவரது உரிமம் புதுப்பித்தல் தொகையை ஆன்லைன் மூலமாக 18.02.2026 ஆம் தேதி செலுத்திவிட்டதாகவும், அதுசம்மந்தமாக மேற்படி அலுவலகத்திற்கு வந்ததாகவும், மேற்படி அலுவலகத்தின் அலுவலர் திருமதி.ரெஜினா அவர்களிடம் உரிமம் புதுப்பித்தல் சம்மந்தமாக தகவல் தெரிவித்தேன் என்றும் தெரிவித்தார். அவரை சோதனை செய்தபோது அவர் அவரது சட்டைப்பையில் வைத்திருந்த ரூ.8,000/-த்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் குறித்து அவரிடம் விசாரித்தபோது அப்பணம் அவரது சொந்தபணம் என்றும், அவரது வாகனத்திற்கு டீசல் போடும் செலவிற்காகவும், வாகன பராமரிப்பிற்கு வைத்திருப்பதாகவும் தெரிவித்தார். மேலும் அப்பணத்தை ATM ல் எடுத்தது சம்மந்தமாக தற்போது அவரிடம் வங்கிப் பண பரித்தனை எதுவும் இல்லை என்றும் கூறினார். மேற்படி பணம் சம்மந்தமாக அவரது கூற்று சந்தேகத்திற்கு இடம் அளிக்கும் வகையில் இருந்ததால் அப்பணம் மேற்படி அலுவலகத்தில் உள்ள அலுவலருக்கு கொடுப்பதற்காகக் கொண்டு வந்த பணம் என கருதி அந்த பணம் ரூ.8,000/-த்தை கைப்பற்றினேன். மேற்படி அலுவலத்தில் பொறியாளர் பிரிவு அறையில் பணியிலிருந்த G.நெல்லைராஜன் அவர்கள் 23.10.2026 ஆம் தேதி காலை சுமார் 08.00 மணியளவில் மேற்படி அலுவலகத்திற்கு வந்து வருகை பதிவேட்டில் கையொப்பம் செய்துவிட்டு பணி சம்மந்தமாக வெளியே சென்றுவிட்டு மாலை சுமார் 03.30 மணிக்கு மேற்படி அலுவலகத்திற்கு வந்ததாகவும் தெரிவித்து அவர் வைத்திருந்த ரூ.100/-யை எடுத்து ஆஜர் செய்து, அவரது சொந்த செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். அப்பணத்திற்கு தகுந்த முகாந்திரம் தெரிவித்ததால் பணம் கைப்பற்றவில்லை. மேலும் அவரது One plus note 4 கைப்பேசியை நான் பெற்று மேற்படி நெல்லைராஜன் அவர்களிடம் விசாரித்தபோது அவர், அவரது கைப்பேசியில், கைப்பேசி எண் 98652-29990 (Airtel) வைத்து பயன்படுத்திவருவதாகவும், மேலும் GPay மற்றும் Phone pay ஆகியவற்றை தேனி இந்தியன் வங்கி கணக்கு மூலமாக வைத்து பயன்படுத்தி

வருவதாகத் தெரிவித்தார். அதில் உள்ள GPay பண பரிவர்த்தனைகளை விபரங்களை பார்வையிட்டபோது, கடந்த 11.06.2026 ஆம் தேதியன்று ரூ.50,000/- மும், 18.11.2025 ஆம் தேதியன்று ரூ.47,000/-மும் நெல்லைராஜனின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. அது சம்மந்தமாக மேற்படி நெல்லைராஜனிடம் விசாரித்தபோது அப்பணத்தை ஒப்பந்ததாரர் ராஜேந்திரன் என்பவர் மேற்படி அலுவலகத்தின் பொதுப்பணி மேற்பார்வையாளராகப் பணிபுரியும் திரு.உலகநாதன் அவர்களுக்கு கொடுக்கச்சொல்லி அனுப்பிய பணம் எனத் தெரிவித்தார். மேலும் மேற்படி நெல்லைராஜன் அவர்களின் GPay பணபரிவர்த்தனைகளை பார்வையிட்ட போது கடந்த 09.09.2025 ஆம் தேதியன்று ரூ.50,000/-, 12.09.2025 ஆம் தேதியன்று ரூ.20,000/-, 01.10.2025 ஆம் தேதியன்று ரூ.50,000/-, 06.10.2025 ஆம் தேதியன்று ரூ.50,000/-, 14.10.2025 ஆம் தேதியன்று ரூ.20,000/-, 17.10.2025 ஆம் தேதியன்று ரூ.15,000/-, 30.10.2025 ஆம் தேதியன்று ரூ.15,000/-, 10.11.2025 ஆம் தேதியன்று ரூ.30,000/-, 23.11.2025 ஆம் தேதியன்று ரூ.10,000/-, 24.11.2025 ஆம் தேதியன்று ரூ.10,000/-, 30.11.2025 ஆம் தேதியன்று ரூ.11,000/-, 31.12.2025 ஆம் தேதியன்று ரூ.10,000/-, 10.02.2026 ஆம் தேதியன்று ரூ.10,000/-, 09.05.2026 ஆம் தேதியன்று ரூ.20,000/-, 12.05.2026 ஆம் தேதியன்று ரூ.10,000/-, 09.06.2026 ஆம் தேதியன்று ரூ.25,000/-, 11.06.2026 ஆம் தேதியன்று ரூ.35,000/- மற்றும் ரூ.4,000/-, 16.06.2026 ஆம் தேதியன்று ரூ.10,000/- மற்றும் ரூ.5,000/-, 27.06.2026 ஆம் தேதியன்று ரூ.10,000/-, 10.08.2026 ஆம் தேதியன்று ரூ.10,000/- என ஆக மொத்தம் ரூ.4,30,000/- க்கான பணப் பரிவர்த்தனைகள் நடைபெற்றது தெரியவந்தது. இது சம்மந்தமாக மேற்படி நெல்லைராஜன் அவர்களிடம் நான் விசாரித்தபோது அவர் மேற்படி பணம் அனைத்தையும் ஒப்பந்ததாரர்களால் மேற்படி திரு.உலகநாதன் அவர்களுக்கு வழங்கப்பட்டது என்றும், அவர் அந்த பணத்தை திரு.உலகநாதன் அவர்களுக்கு பணமாகவும், உலகநாதனின் GPAY எண் 88386-89204 மூலமாகவும் அனுப்பியதாகத் தெரிவித்தார். இது சம்மந்தமாக மேற்படி நெல்லைராஜன் அவர்கள் எழுத்துபூர்வமான தனது வாக்குமூலத்தை எழுதி அதில் கையெழுத்திட்டு என்னிடம் கொடுத்தார். மேலும் மேற்படி அலுவலகப் பொறியாளர் பிரிவு அறையில் பணியில் இருந்த திரு.S.உலகநாதன் அவர்களிடம் பணம் எதுவுமில்லை. மேலும் அவரது OPPO reno 14 5G கைப்பேசியை நான் பெற்று மேற்படி உலகநாதன் அவர்களிடம் விசாரித்தபோது அவர் மேற்படி

கைப்பேசியில் அவரது கைப்பேசி எண்கள் 8838689204 மற்றும் 77087-24212 (Airtel) ஆகியவை வைத்து பயன்படுத்திவருவதாகவும், கைப்பேசி எண் 8838689204 ல் GPay யை இராமநாதபுரம், பேங்க் ஆப் பரோடா வங்கி கணக்கு மூலமாக வைத்து பயன்படுத்தி வருவதாக தெரிவித்தார். அதில் உள்ள GPay பணப் பரிவர்த்தனைகளின் விபரங்களை பார்வையிட்டபோது, கடந்த ஜீன் மாதம் 2025 ஆம் ஆண்டு முதல் 23.10.2026 ஆம் தேதி வரை திருமதி.மரியம் பிவீ மைதீன் என்பவர் ரூ.13,800/-ம், திரு.குறிஞ்சி குமரன் ரூ.30,000/-மும், அஜ்மல்கான் ரூ.1,50,000/-மும் அனுப்பியதும் காணப்பட்டன. இதுசம்மந்தமாக மேற்படி திரு.உலகநாதனை விசாரித்தபோது மேற்படி அஜ்மல்கான் என்பவர் ஒப்பந்ததாரர் என்றும், திருமதி.மரியம் பிவீ மைதீன் மற்றும் திரு.குறிஞ்சி குமரன் ஆகியோர் நண்பர்கள் என்றும் அவர்களிடம் அவர் (உலகநாதன்) மருமகனுக்கு பணம் போடுவதற்கு ரொக்கமாகக் கொடுத்து அவர்கள் தனது வங்கி கணக்கிற்கு GPay மூலமாக பணம் அனுப்பினார் எனத் தெரிவித்தார். மேலும் இது சம்மந்தமாக அவரது வாக்குமூலத்தை அவர் கைப்பட எழுதி அதில் கையெழுத்திட்டு என்னிடம் ஒப்படைத்தார். மேற்படி அலுவலகத்தில் அலுவலக வளாகத்தில் நின்றுகொண்டிருந்த L.சரவணக்குமார் என்பவரை விசாரித்தபோது, அவர் மதுரை சோலையழகு புரத்தில் உள்ளதாகவும், B.Tech படித்துவிட்டு மதுரையில் தனியார் கம்பெனியில் பொறியாளராக வேலைபார்ப்பதாகவும், அவரது கம்பெனிக்கு வரவேண்டிய பணத்திற்கான நிலவரத்தை தெரிந்துகொள்வதற்காக 23.10.2026 ஆம் தேதி மதியம் மேற்படி அலுவலகத்தின் மேலாளர் திரு.பாண்டியராஜன் மற்றும் திருமதி.சாரதா ஆகியோர்களை பார்க்க வந்ததாகவும், அவர்கள் வீடியோ கான்பரன்ஸில் இருந்ததால் அவர் காத்துக் கொண்டிருந்ததாகவும் தெரிவித்தார். அவரை சோதனையிட்டபோது, அவர் அவரது மணிபர்ஸில் இருந்து ரூ.9,500/-யை எடுத்து ஆஜர்படுத்தி அப்பணம் அவரது கம்பெனி வெளியூர் பயண செலவிற்காகக் கொடுக்கப்பட்ட பணம் எனத் தெரிவித்தார். அதில் ரூ.1,500/- அவரது சொந்த பணம் என்று தெரிவித்தார். அவர் கூறிய விளக்கம் சந்தேகத்திற்கு இடம் அளிக்கும் வகையில் இருந்ததால் அதிலிருந்த பணம் ரூ.8,000/-த்தை கைப்பற்றினேன். அதுபோக மீதியுள்ள பணம் ரூ.1,500/- அவரிடம் ஒப்படைத்தேன். மேலும் மேற்படி முத்துக்குமாருக்கு சற்று தள்ளி நின்றுகொண்டிருந்த, G.மணிகண்டன், துப்புரவு பணியாளரை விசாரித்தபோது, அவர் கடந்த 12 வருடங்களாக மேற்படி அலுவலகத்தில் ஒப்பந்த ஊழியாராகப் பணிபுரிந்து வருவதாகவும்,

மேற்படி அலுவலகத்திற்கு சம்மந்தப்பட்ட மேலூர் பேருந்து நிலையத்திற்கு உள்ளே வரும் வாகனங்களுக்கு கட்டணங்களாக பணம் வசூல் செய்து மேற்படி அலுவலகத்தின் காசாளரிடம் ஒப்படைப்பதாகத் தெரிவித்தார். அவரிடம் பணம் பற்றி விசாரித்தபோது அவரது சட்டைப்பையிலிருந்த ரூ.100/-யை எடுத்து ஆஜர் செய்து, அது தன்னுடைய சொந்த பணம் என்று கூறினார். அவரது கைப்பேசி VIVO Y28 பார்வையிட்டபோது, அதில் GPAY மற்றும் Phone pay ஆகியவற்றை Jio கைப்பேசி எண் 63808-55213 ன் மூலமாக பண பரிவர்த்தனைகளை ஆய்வு செய்தபோது கடந்த ஆகஸ்டு 2026 முதல் அக்டோபர் மாதம் வரை ரூ.3,42,427/- அவரால் அனுப்பப்பட்டதாகத் தெரியவந்தது. அது சம்மந்தமாக அவரிடம் விசாரித்தபோது அவர் பஸ் ஏஜெண்டாகவும், நண்பர்கள் உதவியுடன் தவணைக்கு பணம் கொடுத்து வாங்குவதாகவும், அவரது இருசக்கர வாகனத்திற்கு EMI கட்ட அனுப்பியதாகவும் தெரிவித்தார். இதுசம்மந்தமாக அவரது எழுத்துபூர்வமான வாக்குமூலத்தை எழுதி என்னிடம் கொடுத்தார். இதுசம்மந்தமாக மேற்படி அலுவலகத்தின் நகராட்சி பொறியாளர் திரு.முத்துகுமார் மற்றும் 8 அலுவலர்களும் தங்களது எழுத்து பூர்வமான வாக்குமூலத்தை என்னிடம் தனித்தனியாக எழுதி அதில் கையெழுத்திட்டு கொடுத்தார்கள். மேற்படி முத்துகுமார் அவர்கள் அவரது அலுவலகத்தில் சி.சி.டி.வி கேமராக்கள் இயங்குகிறதா? எனத் தெரியவில்லை என்றும், மேலும் அதற்கான display காண இயலாத நிலையில் உள்ளது எனத் தெரிவித்து, மேற்படி மேலூர் நகராட்சி அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பொதுப்பிரிவு பதிவேடுகளான 1) மேலூர் நகராட்சி அலுவலகத்தின் 2026ஆம் ஆண்டிற்கான அலுவலக வருகைப் பதிவேடு (பக்கம் 01 முதல 21 வரை), 2) மேலூர் நகராட்சி அலுவலகத்தின் 2026ஆம் ஆண்டிற்கான அலுவலகப் பணியாளர்களின் ரொக்கம் கையிருப்புப் பதிவேடு (பக்கம் 01 முதல் 31 வரை), 3) மேலூர் நகராட்சி அலுவலகத்தின் 2026ஆம் ஆண்டிற்கான அலுவலகத்தின் தோற்றுவிக்கப்படாத பணியிடங்கள் வருகைப் பதிவேடு (பக்கம் 01 முதல் 20 வரை), 4) மேலூர் நகராட்சி அலுவலகத்தின் 2026ஆம் ஆண்டிற்கான அலுவலகப் பொறியியல்பிரிவு வருகைப் பதிவேடு (பக்கம் 01 முதல் 10 வரை), 5) மேலூர் நகராட்சி அலுவலகத்தின் 2026ஆம் ஆண்டிற்கான அலுவலக பொது சுகாதாரபிரிவு வருகைப் பதிவேடு (பக்கம் 01 முதல் 10 வரை), 6) மேலூர் நகராட்சி அலுவலகத்தின் 2026ஆம் ஆண்டிற்கான அலுவலக நகரமைப்பு பிரிவு வருகைப் பதிவேடு (பக்கம் 01 முதல் 12 வரை) விசாரணைக்காக

ஆஜர் செய்தார். அந்த ஆவணங்களையும் திருமதி.முத்துலெட்சுமி ஆஜர் செய்த 7) மேலூர் நகராட்சி BRV abstract input parameter: from date:22/OCT/2026; to date: 22/OCT/2026 (பக்கம் 01 முதல் 02 வரை), 8) 23.10.2026 ஆம் தேதி மேலூர் நகராட்சி ஆணையர் பெயரில் ரூ.6,630/-, ரூ.67,808/-, ரூ.3,600/-, ரூ.20,869/-, ரூ.38,610/- மற்றும் ரூ.16,582/- ஆகிய தொகைகளுக்கு Indian Overseas வங்கியில் செலுத்தியதற்கான செலான் நகல்களையும் (பக்கம் 01 முதல் 06 வரை) மற்றும் இவ்வழக்கு தொடர்புடைய மேற்கூறிய பணம் மொத்தம் ரூ.23,410/-யையும், ஆகியவற்றை கைப்பற்றினேன். மேலும் சோதனையின் போது மேலூர் நகராட்சி அலுவலக நகராட்சி பொறியாளர் திரு.வெ.முத்துக்குமார், பொதுபணி மேற்பார்வையாளர் திரு.உலகநாதன், பிட்டர் திரு.G.நெல்லைராஜன், இளநிலை உதவியாளர் (காசாளர்), திருமதி.M.முத்துலெட்சுமி, வருவாய் உதவியாளர்கள் திரு.A.வீரமணி, திரு.D.செல்லப்பாண்டி, உரிமம் பெற்ற கட்டிட சர்வேயர் திரு.S.சசிகுமார் (தனிநபர்), பிளானிங் என்ஜினியர் திரு.L.சரவணகுமார் (தனிநபர்), துப்புரவுப் பணியாளர் (ஒப்பந்த ஊழியர்) திரு.G.மணிகண்டன், ஆகியோர்களைத் தனித்தனியாக விசாரித்து பதிவு செய்த வாக்குமூலங்களை பெற்றேன். மேற்படி திடீர் இணை ஆய்வின்போது தயார் செய்யப்பட்ட திடீர் இணை ஆய்வு குறிப்புரை, கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ.23,410/-, 8 ஆவணங்கள் மற்றும் 9 வாக்குமூலங்கள் ஆகியவற்றை இணைத்து, மேற்படி மதுரை மாவட்டம், மேலூர் நகராட்சி அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வின்போது அலுவலக தனிநபர்கள் ரொக்க இருப்புப் பதிவேட்டில் பதியாமல் கணக்கில் வராத பணம் வைத்திருந்த இளநிலை உதவியாளர் (காசாளர்), திருமதி.M.முத்துலெட்சுமி, வருவாய் உதவியாளர்கள் திரு.A.வீரமணி, திரு.D.செல்லப்பாண்டி ஆகியோர்கள் மீதும், தனது பணியை முடிப்பதற்காக லஞ்சமாகப் பணம் கொடுக்க வைத்திருந்த தனி நபர்கள் உரிமம் பெற்ற கட்டிட சர்வேயர் திரு.S.சசிகுமார் (தனிநபர்), பிளானிங் என்ஜினியர் திரு.L.சரவணகுமார் (தனிநபர்) மீதும், GPay மூலம் ஒப்பந்ததாரர்களிடம் பணம் பெற்ற பொதுபணி மேற்பார்வையாளர் திரு.உலகநாதன், பிட்டர் திரு.G.நெல்லைராஜன், துப்புரவுப் பணியாளர் (ஒப்பந்த ஊழியர்) திரு.G.மணிகண்டன் மற்றும் அவர்களுக்கு உடந்தையாக செயல்பட்ட நகராட்சிப் பொறியாளர் திரு.வெ.முத்துக்குமார் ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்க

வேண்டி தங்களிடம் இந்த அறிக்கையை அளிக்கிறேன். Sd/-XXXXXX (C.சுந்தரமுருகன்) 24.10.2026 துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக் குழு அலுவலகம், மதுரை. இணைப்பு : 1) மதுரை மாவட்டம், மேலூர் நகராட்சி அலுவலகத்தில் தயார்செய்யப்பட்ட திடீர் இணை ஆய்வு குறிப்புரை, நாள். 23.10.2026. 2) கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் ரூ.23,410/-. 3) மதுரை மாவட்டம், மேலூர் நகராட்சி அலுவலகத்தில் கைப்பற்றப்பட்ட 8 ஆவணங்கள். 4) ஒன்பது வாக்குமூலங்கள்.

Sir, Received this report today (24.10.2026) at 14:00 hrs along with Joint Surprise Check Proceedings, dated 23.10.2026, Cash Rs. 23,410/-, Nine statements and eight documents. After obtaining permission from the Superior Officers,

I registered a case in Madurai V&AC Crime No.16/2026 u/s 7, 7A of PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 and 106 BNSS Act on 24.10.2026 at 15:00 hrs. Sd/- XXXXX (K. Kumaraguru) 24/10/2026 Inspector, V&AC, Madurai.

The original FIR along with report dated : 24.10.2026 of Tr.C.Sundaramurugan, Joint Surprise Check Proceedings Dated : 23.10.2026, Statements of officials (6), Statements of Private Individuals (3) are submitted to the Hon'ble Special Judge, Special District Court for trial of Prevention of Corruption Act cases, Madurai and other copies were sent to the officers concerned.

24/10/2026.

(K. KUMARAGURU)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Madurai.
(24.10.2026)